


Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 211

திங்கட்கிழமை
24 ஜூன் 2024

ஆனி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# புலிகள் மீதான தடை பிரிட்டனில் தொடரும்!

## தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் மேன்முறையீட்டு ஆணையம் அறிவிப்பு

**லண்டன், ஜூன் 24**

**பிரிட்டனில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கமுடியாது என அந்த நாட்டின், தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் மேன்முறையீட்டு ஆணையம் அறிவித்துள்ளது. இதனால் புலிகள் மீதான தடை பிரிட்டனில் நீடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.**

☞ 11

60 இலட்சம் ரூபாவை

## 'ஆட்டையைப்' போட்டவர் மாட்டினார் பொலிஸில்!

யாழ்ப்பாணம், ஜூன் 24
வெளிநாடு அனுப்புவதாக 60 இலட்சம் பண மோசடி செய்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சந்தேகநபரை, பொறிவைத்து மடக்கிப் பிடித்தனர் பொலிஸார்.
சர்வதேச மனித உரிமைகள் காப்பகத்தில் பணியாற்றுவதாகவும், தான் கொழும்பில் வசிப்பவர் எனவும் அடையாளப்படுத்திய

☞ 11

## ஒவ்வாமையால் சிறுவன் சாவு!

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணத்தில் 15 வயதுடைய சிறுவன் ஒருவன் ஒவ்வாமை நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

☞ 11

## இன்று பாடசாலைகள் வழமைபோல் இயங்கும்!

கொழும்பு, ஜூன் 24
பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கு ஆதரவாக, ஒன்றிணைந்த கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் இன்று

☞ 11

## 3 வயதுப் பாலகிக்கு பாலியல் தொல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 24
வவுனியா, மகாறம்பைக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 3 வயது சிறுமி ஒருவருக்குப் பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்

☞ 11

## தமிழர்களின் ஆதரவு ரணிலுக்கு கஷ்டமே!

### சித்தார்த்தன் ஆரூடம்



கொழும்பு, ஜூன் 24
ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி ஆதரவு வழங்கினால் அவருக்கு தமிழ் மக்களின் ஆதரவு கிடைப்பது கடினமாகவே அமையும். தமிழ்ப்

☞ 12

நவாலியில் நேற்றிரவு

## தம்பதியர் மீது வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், ஜூன் 24
நவாலி வடக்கில் நேற்று அதிகாலை வீடுபுகுந்து, நித்திரையில் இருந்த தம்பதியர் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில், அவர்கள் இருவரும் படுகாயமடைந்தனர்.
இது குறித்து மேலும்

☞ 11



## சந்நிதியானுக்கு இன்று பொங்கல்

☞ 09

நாடுமுழுவதும் ஜூன் 26 ஆம் திகதி

## அதிபர், ஆசிரியர்கள் சுகவீனப் போராட்டம்

☞ 11

நெடுந்தீவில்

## இளைஞர் கொலை; மர்மம் விலகியது!

யாழ்ப்பாணம், ஜூன் 24
நிகழ்வொன்றில் மதுபோதையில் ஏற்பட்ட மோதலின் தொடர்ச்சியாகவே நெடுந்தீவில் இளைஞன் கொலை செய்யப்பட்டுள்ளான் என பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அத்துடன் கொலை தொடர்பில்

☞ 11

தொடர்பாடல் வலையமைப்புக்குள்

## குப்புறக் கவிழ்ந்த 'கப்'வாகனம்!

முல்லைத்தீவு, ஜூன் 24
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகபுரம் வீதியில்கட்டுப்பாட்டை இழந்தகப்ரகவாகனமொன்று தொலைத்தொடர்பு தூண்களுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

☞ 12

காய்ச்சலால் பாதிக்கப்பட்டு –

## முதல்நாள் மருந்தெடுத்த பெண் மறுநாள் வீட்டில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24
காய்ச்சல் காரணமாக சுதுமலை தெற்கு சாவற்காட்டைச் சேர்ந்த பெண்ணொருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.
விஜயகுமார் குணராணி (வயது - 63 ) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். இவர் 5 பிள்ளைகளின் தாயாராவார்.

☞ 11

முல்லைத்தீவில்

## சிறுமி துஷ்பிரயோகம்; பொலிஸ் விசாரணை

முல்லைத்தீவு, ஜூன் 24
முல்லைத்தீவு - முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பாலியல்

☞ 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இணையவழிக் கடன்; சிக்கிய நாட்டு மக்கள்

## பொலிஸார் விசாரணை



**கொழும்பு, ஜூன் 24**

**இணையவழிக் கடன் வழங்கும் நிறுவனங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத்துறை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**

முகநூல் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் ஊடாக பல்வேறு விளம்பரங்களை செய்து நாட்டில் இயங்கிவரும் இணையவழி கடன் வழங்கும் நிறுவனங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கிக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பல கடன் வழங்கும் நிறுவனங்கள் சுற்றுலா விசாவில் நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டினரால் நடத்தப்படுகின்றன என்றும் அவை கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை அல்ல எனவும் தெரியவந்துள்ளது. மேலும், இணையவழி கடன் வழங்கும் நிறுவனங்கள் வெளியிடும் விளம்பரங்களால் மக்கள் ஏமாற்றப்பட்டு கடனை பெறுவதாகவும், அந்தக் கடனுக்கு அதிக வட்டி வசூலிக்கப்படுகின்றது என்றும் அறியவருவதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார். (ச-இ)

# பொன்சேகாவுக்கு

## மார்ஷல் பட்டம்?



கொழும்பு, ஜூன் 24

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு, விரைவில் மார்ஷல் என்ற இராணுவப் பதவி நிலை வழங்கப்படவுள்ளது என்று சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உலக பாதுகாப்பு பதவி கட்டமைப்பில் மார்ஷல் பதவியே உயரிய பதவி நிலையாகக் கருதப்படுகின்றது. இந்தப் பதவியானது 6 நட்சத்திர ஜெனரல் அந்தஸ்து நிலையாகும்.

சரத் பொன்சேகாவால் அரசிடம் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையின் பிரகாரமே இப் பதவி வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன், ரஷ்யாவின் முன்னாள் தலைவர் ஜோசப் ஸ்டாலின், சீனாவின் தலைவர் மாவோ சேதுங் உட்பட சில உயர்மட்டத் தலைவர்கள் மார்ஷல் என்ற பதவி நிலையை வகித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-44)

## ஒழுக்காற்று நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 24

கட்சி தலைமையைக் கடுமையாக விமர்சித்தும், கட்சி ஒழுக்கக் கட்டமைப்பை மீறும் வகையிலும் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகாவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு ஆளுங்கட்சியில் இருந்து நேரம் பெற்றுக்கொண்டமை, ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கட்சி எடுத்துள்ள முடிவுக்கு எதிராகச் செயற்படுகின்றமை உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டே ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராயப்படவுள்ளது. (ச-44)

# வாக்குக்காக வந்தால் பெரமுன ஆதரிக்காது

கொழும்பு, ஜூன் 24

வாக்குகளுக்காக மட்டுமே கட்சியின் ஆதரவைப் பெற்றுவிட்டு பிரிந்து செல்லும் நபர்களுடன் பெரமுன கூட்டணி அமைக்காது.

-இவ்வாறு அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து வெற்றிபெற முடியாது எனக் கருதும் எந்தவொரு பிரிவினரும் கட்சியை விட்டு வெளியேறவேண்டும்.

பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளரை நியமித்தால், அது பெரமுனவின் கொள்கைகளை நிலைநிறுத்தி முன்னெடுத்துச் செல்லக் கூடிய ஒருவராக இருப்பார்.

வாக்குகளுக்காக மட்டுமே கட்சியின் ஆதரவைப் பெற்று பிரிந்து செல்லும் நபர்களுடன் பெரமுன கூட்டணி அமைக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# ஐ.நா. வின் ஆணைகள் ஒருதலைப்பட்சமானவை

## இலங்கை அரசு எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 24


ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின், ஒருதலைபட்சமான மனித உரிமை ஆணைகளுக்கு இலங்கை அரசாங்கம் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

ஜெனீவாவிலுள்ள இலங்கை நிரந்தர தூதரகத்தின் அமைச்சு ஆலோசகர் திலினி லெனகல, அறிக்கை ஒன்றை வெளியிட்டு எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:-

மாற்றத்தை வளர்ப்பதற்கு உள்நாட்டு முயற்சிகள் மூலம் ஏற்பட்ட முன்னேற்றத்தை ஒப்புக்கொள்வது முக்கியமானது.

ஒரு நாட்டின் அனுமதியின்றி நடைமுறைப்படுத்தப்படும் ஆணைகள், நாட்டைப் பிளவுபடுத்தும் மற்றும் பயனளிக்காதவை. ஐக்கிய நாடுகள் பொதுச்சபை தீர்மானம் 60/251 மற்றும் ஐ.பி. பொதியில் குறிப்பிடப்



பட்டுள்ள வழிகாட்டும் கொள்கைகளின் அடிப்படையில் ஒருகூட்டு அணுகுமுறைக்கு இலங்கை அழைப்பு விடுக்கிறது.

மனித உரிமைகள் பேரவையின் பணியானது இறையாண்மை சமத்துவம், பிரதேச ஒருமைப்பாட்டுக்கு மதிப்பளித்தல் மற்றும் தலையீடு செய்யாமை போன்ற கோட்பாடுகளால் வழிநடத்தப்படவேண்டும்.

எனவே, ஒருதலைப்பட்சமான ஆணைகளைப் பின்பற்றுவது இந்தக்கோட்பாடுகளைக் குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது. அத்துடன் மனித உரிமைகள் பிரச்சினைகளில் உண்மையான முன்னேற்றத்தைத் தடுக்கிறது- என்றுள்ளது. (ச-இ)

# 225 மில்லியன் டொலர் இந்தியக் கடன் அடைப்பு

## மத்திய வங்கி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இந்திய மத்திய வங்கிக்கு 225 மில்லியன் அமெரிக்க டொலர் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது என்று உத்தியோகபூர்வமாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இதுவரை இரண்டு தவணைகளாக இந்தியாவுக்கு 375 டொலர் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு ஒக்ரோபரில், இந்திய மத்திய வங்கியிடமிருந்து இலங்கை மத்திய வங்கி 2,601.43 மில்லியன் டொலர் கடனைப் பெற இலங்கையின் திறைசேரி உத்தரவாதத்தை வழங்கியிருந்தது.

உத்தியோகபூர்வ தரவுகளின்படி, இந்திய மத்திய வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் கடந்த டிசெம்பர் மாதத்தில் 2,451.43 மில்லியன் டொலராக இருந்த நிலையில் தற்போது 2,226.43 மில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வட்டுக்கோட்டையில் பஸ் -டிப்பர் விபத்து

கொழும்பு, ஜூன் 24

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த தனியார் பேருந்தும் சித்தங்கேணியிலிருந்து வந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை நடந்துள்ளது.

விபத்தில் பேருந்தில் முன்பக்கம் சேதமடைந்துள்ளதுடன் பேருந்தில் பயணித்த பயணிகளுக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. விபத்துத் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-22)

# இலங்கைப் போர்க்கால ஊடகவியலாளர் மறைவு

கொழும்பு, ஜூன் 24

இலங்கைப் போர் குறித்து செய்திகளை அறிக்கையிட்ட மூத்த இந்திய ஊடகவியலாளர் பி.முரளிதர் ரெட்டி காலமானார்.

உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர் நேற்றுமுன்தினம் இரவு டில்லி மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

'த ஹிந்து'வின் டில்லி பணியகத்தில் சுமார் மூன்று தசாப்தங்களாக அவர் பணியாற்றியதுடன் பாகிஸ்தான் மற்றும் இலங்கை நிருபராகவும் செயற்பட்டுள்ளார். இலங்கையின் உள்நாட்டுப்போரின் இறுதிக்கட்டத்தில் அவர் கொழும்பில் தங்கியிருந்து அறிக்கையிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைதாண்டிய மீன்பிடியை ஒருபோதும் அனுமதிக்கோம்!

## மன்னார் மீனவ சங்க சமாச செயலாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 24**

**இந்திய எல்லைதாண்டல் தொடர்பில், இராமேஸ்வர மீனவர் சங்கத்தின் தலைவரது கருத்தை நிராகரிக்கின்றோம் என்று மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளர் முகமட் ஆலம் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது அவர் மேலும் கூறியதாவது:-

அண்மையில் இராமேஸ்வர மீனவத் தலைவர், கருத்து ஒன்றைப் பதிவு செய்திருந்தார். இந்திய மீனவர்கள் இலங்கைக் கரையை நாடுவது தவிர்க்க முடியாது என உறுதிபடத் தெரிவித்துள்ளார். இதன் மூலம் இந்தியாவிலிருந்து இலங்கை எல்லையைக் கடப்பது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சு, ஜனாதிபதி, என பல இடங்களுக்குக் கடிதம் அனுப்பியும் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

இந்தியத் தரப்பு இலங்கையைக் கையாளுகின்ற நிலை, இலங்கையை அடிமையாக்கி வைத்துள்ளது. இலங்கை சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படுகின்ற பொழுதும், இந்தியா வடக்கு - கிழக்கு அபிவிருத்தி என்ற போர்வையில் நிலத்தைக் கைப்பற்றவுள்ளது. எமது நாடாளுமன்ற உறுப்பினர்களும் அசமந்தமாகவுள்ளனர். ஜனாதிபதி உட்பட ஏனைய அரச அதிகாரிகளும் இந்தியா சார்பாக உள்ளார்கள். அவ்வாறில்லாது, எமது நாட்டு மக்கள் நலன் குறித்து கவனத்தில் கொள்ளவேண்டும் - என்றார். (ப-125)



# எரிந்த நிலையில் மோ.சைக்கிள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்.கோப்பாய் - இராசபாதை வீதியில் எரிந்த நிலையில் மோட்டார் சைக்கிளொன்று பொலிஸாரால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

வீதியால் பயணித்த சிலர் எரிந்த நிலையில் காணப்பட்ட மோட்டார் சைக்கிள் தொடர்பாக பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது. அதனருகே இலக்கத்தகடு ஒன்று காணப்பட்டுள்ளது. இதுதொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் கோப்பாய் வடக்குப் பகுதியைச் சேர்ந்த ஒருவரது மோட்டார் சைக்கிளே இவ்வாறு தீக்கிரையாகியமை கண்டறியப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-26-20-125)

# இந்திய மீனவர்கள் 22 பேர் மூன்று படகுகளுடன் கைது!

இலங்கைக் கடற்பரப்புக்குள் சட்டவிரோதமான முறையில் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில், தமிழக மீனவர்கள் 22 பேர் மூன்று படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக்கு அருகேயுள்ள கடற்பரப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மூன்று படகுகளுடன் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 22 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு, ஆரம்ப கட்ட விசாரணைகளின் பின்னர் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் வைத்து யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ப-100-26-56)

# தங்கம் கடத்தல்; இருவர் கைது

கொழும்பு, ஜூன் 24

பெருந்தொகை தங்கத்தை சட்டவிரோதமானமுறையில் எடுத்துவந்த மதகுருவும், பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மக்காவுக்கு புனிதயாத்திரைக்குச் சென்று இலங்கை திரும்பிய மட்டக்களப்பு மற்றும் கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.


சந்தேகநபர்களின் பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், ஒருகோடியே 90 இலட்சம் ரூபா பெறுமதியான 859 கிராம் நிறையுடைய 24 மற்றும் 22 கரட் நகைகளே கைப்பற்றப்பட்டது என்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# பலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரித்தது ஆர்மீனியா

ஆர்மீனியா, ஜூன் 24

ஐரோப்பிய நாடுகள் பலவும் இணைந்து, பலஸ்தீனத்துக்குத் தனி நாடு அங்கீகாரம் அளிப்பதே பலஸ்தீனம்-இஸ்ரேல் மோதலுக்குத் தீர்வாகும் என்ற முடிவை முன்மொழிந்து வருகின்றன. இந்நிலையில் ஆசிய நாடான ஆர்மீனியாவும் பலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரித்துள்ளது. இஸ்ரேல்- பலஸ்தீனம் இடையிலான மோதலைத் தீர்க்கப் பலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிப்பதே தீர்வாகும் என ஆர்மீனியாவின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதே வேளை - ஏற்கனவே, அயர்லாந்து, ஸ்பெயின், நோர்வே ஆகிய நாடுகள் பலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ப-66)

# மரக்கறிகள் விலையேற்றம்



கொழும்பு, ஜூன் 24

நாட்டின் பல பகுதிகளில் கடந்த காலங்களில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் உள்ளிட்ட இதர காரணங்களால் நாடளாவிய ரீதியில் மரக்கறிகளின் விலை திடீரென உயர்ந்துள்ளது.

கடந்த நாள்களில் 100 ரூபாவுக்குக் குறைவாக விற்பனை செய்யப்பட்ட மரக்கறிகள் இன்று 300 முதல் 500 ரூபாவை கடந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# தினம் தெரியுமோ?

ஒரேயொரு அதிர்வுதான். டக்கெண்டு வவுனியா கூமாங்குளத்திலையும் அதைச் சுத்தி இருக்கிற ஏரியாக்களிலையும் காணிவிலை சரிஞ்சு போட்டுதாம். உண்மையில 2.3 ரிச்டர் அளவில நிலம் அதிர்ந்தால் அதால பாதிப்பு ஒண்டுமே இல்லை. அது நிலநடுக்கத்துக்கையும் வராது. உலகம் முழுக்க இப்பிடி சின்னச் சின்ன அதிர்வுகள் லட்சக்கணக்கில நடக்குது. அந்த இடங்களெல்லாம் அப்பிடியே கவிண்டு கொட்டுண்டு போகேலையே. சில அரைகுறையள் தான், 'இனி இஞ்ச நிலநடுக்கம் அடிக்கடி வரப்போகுது' எண்டு பேஸ்புக்கில கதையைக் கட்டிவிட, அது ஜெட் வேகத்தில எல்லா இடமும் பரவி, இப்ப அந்த இடத்தின்ர பெறுமதியையே இல்லாமல் செய்துபோட்டுது. அதைவிட இன்னொரு பகிடியும் இருக்கு. நிலத்துக்கு கீழ பத்துக்கிலோமீற்றர் ஆழத்தில தான் இந்த அதிர்வு நடந்திருக்கு. அப்பிடி பத்துக் கிலோமீற்றர் ஆழத்தில நடந்த அதிர்வை ஆனானப்பட்ட அமெரிக்க விஞ்ஞானிமாரே இந்த இடத்திலதான் அந்த அதிர்வின்ர மையம் எண்டு சொல்லேலாம முழிபிதுங்க, எங்கட வில்லேஜ் விஞ்ஞானியள் 'கூமாங்குளத்தில இருக்கிற இந்த வீட்டுக்குக்கு சரிநேர்கீழதான் பூமி அதிர்ந்தது' எண்டு அடிச்சுவிட்ட 'கப்சாவில' பூமியதிர்ச்சிக்கே ஹார்ட் அட்டாக் வந்திருக்கும்.

இன்னும் சில விஞ்ஞானியள், 'உதெல்லாம் வவுனியாவில தோண்டின குழாய்க்கிணத்தால தான் வந்தது. முதல்ல உந்தக் குழாய்க்கிணறு அடிக்கிறவங்களைப் பிடிச்சு உள்ளுக்க போடோணும்' எண்டு கம்பு சுத்த வெளிக்கிட்டிட்டினம். குழாய்க்கிணத்தால எங்கட தண்ணிவளத்துக்குப் பாதிப்பு எண்டது உண்மைதான். அதுக்காக அந்தக் குழாய்க்கிணறுகளால தான் பூமி அதிருது எண்டது எவ்வளவு பெரிய பேய்க்காட்டு. அப்பிடிப்பார்த்தால், முந்தின வெட்டுக்கிணத்தால ஏன் பூமியதிர்ச்சி வரேலை. குழாய்க்கிணத்தை விட ஆழமும், அகலமும் கூடினமாதிரித்தான் வெட்டுக்கிணறுகள் இருக்கும். குழாய்க்கிணத்தால பூமி அதிருமெண்டால், வெட்டுக்கிணத்தால பூமி குலுங்கி கூத்தெல்லோ ஆடியிருக்கும். ஏதோ எல்லாரும் தங்களுக்கு என்னென்ன டவுட்டுகள் இருக் குதோ, அதெயெல்லாம் இட்டுக்கட்டிச் சொல்றதுக்கு உந்தப் பூமி அதிர்வு நல்ல சான்ஸாப் போட்டுது. இப்ப இவையின்ர கட்டுக்கதை யளால கூமாங்குளச் சனமும், சுத்தியுள்ள ஏரியாக் காரரும் இனி எப்ப, எந்த வீட்டுக்கு கீழ நிலம் அதிரப் போகுதோ எண்டு ஏங்கிக் கொண்டு இருக்குதுகளாம்.

எரியிற வீட்டில பிடுங்கி லாபம் பாக்கிற ஒரு குரூப், இந்தச் சந்தடி சாக்கில அங்க உள்ள காணி, பூமியளை அடிமாட்டு விலைக்கு வாங்கிறதுக்காக படையெடுத்திருக்கினம் எண்டு கதை. 'இனி இஞ்ச ஆர் காணி வாங்க வரப்போகினம். நில அதிர்வு உள்ள ஏரியா எண்டு தெரிஞ்சும் காணியை வாங்கிறவன் எண்டால் அவனை விட மொக்கன் இருக்கமுடியாது. ஏதோ உங்களுக்கு உதவலாம் எண்டு இதை வாங்க நினைக்கிறன்' எண்டு குழையடிச்சு, கொஞ்சக் காசோட காணியளைக் கைமாத்த நினைக்கினமாம். 'பூகம்ப வேளையிலும் இரு வான்கோழி கலவி கொள்ளும்' எண்டு வைரமுத்து எழுதினது உண்மையோ பொய்யோ தெரியாது. ஆனால் உந்தக் காணிப்புறோக்கர்மார் அதை உண்மையாக்கப் பாக்கினம் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

# செல்லத்துரை தவமணி

**தோற்றம்** 25.03.1940

**மறைவு** 05.07.2023



ஆண்டு ஒன்று ஆகிவிட்டது
ஆறவில்லை எங்களின் துயரம் அம்மா
ஆறாத துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்கள்

நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது
உங்களின் ஆயுள் கணக்கை
மாற்றி போட்டிருக்கலாம் இறைவன்
மனமிரங்க மறுத்தரோ இறைவனும்

இல்வாழ்க்கை இவ்வுலகில்
- போதுமென
விண்ணுலகில் வாழ்ந்திட நீங்கள்
விரைந்து தான் சென்றீர்கள்
விடியும் பொழுதெல்லாம் உங்கள்
நினைவே எங்கள் மனதெல்லாம்

தங்களின் ஆத்மா சாந்தி பெற்று
சிவனடி சேர சிந்தை நிறைய
வேண்டி வணங்குகிறோம் "அம்மா"

பிரிவால் துயருறும்

**மகன் - கிருஸ்ணா (கனடா)**
**மற்றும் குடும்பத்தினர்**

தொடர்பு : **077 582 9422**
**+ 1416 268 7098**

**இல.98, சுன்னாகம் மேற்கு,**
**சுன்னாகம் அம்பனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கடற்பதற்றத்தை தணிக்குமா தமிழகம்?

இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் மோடியிடமும், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடமும் வலியுறுத்தியுள்ளார் தமிழக முதல்வரான மு.க.ஸ்டாலின். இந்தியாவில் கடந்த சில வாரங்களாக நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த மீன்பிடித் தடைக்காலம் முடிவடைந்து தற்போது மீண்டும் ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு ஆழ்கடல் மீன்பிடி அனுமதிக்கப்பட்ட மறுநாளே அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடுவதை தமிழக மீனவர்கள் தீவிரப்படுத்தியுள்ளனர். கடற்படையால் நேற்றும்கூட 22 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள பின்னணியில் தான், இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிப்பது தொடர்பிலும், கைதுகளைத் தடுத்துநிறுத்துவது தொடர்பிலும் தமிழக முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியிருக்கின்றார்.

தமிழக முதல்வர் மட்டுமல்ல, ம.தி.மு.க.வின் தலைவர் வைகோ, பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் என்று தமிழகத் தலைவர்கள் பலர் இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களைக் கைதுசெய்வது தொடர்பில் மோடிக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சுக்கும் தொடர்ச்சியாகக் கடிதங்களை அனுப்பிவருகின்றனர். இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்களை அத்துமீறிய வகையிலும் அராஜகமாகவும் தான் கைதுசெய்கின்றது என்பதே அவர்களின் பொதுவான கருத்தாக அமைந்துள்ளது. ஆக, இந்த விடயத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்பை - பிரச்சினையின் பின்னணியை பிறிதொரு தளத்தில் நின்று - அதுவும் ஈழத்தமிழர்களின் தளத்தில்நின்று சிந்திப்பதற்குக்கூட ஈழத்தமிழர்களின் நெருக்கமான உறவுகள் என்று கூறிக்கொள்ளும் தமிழகத் தலைவர்களால் முடியவில்லை. உண்மையில் மிகவும் மனவருத்தத்துக்குரிய விடயம் இதுதான். 30 ஆண்டு காலமாக போர் தின்றுதீர்த்த வடக்கு மாகாண மீனவர்களின் பொருளாதாரம் போரின்பின்னரே மெல்லத் தலைதூக்க எத்தனித்தது. ஆனால், தற்போது அந்தச் சிறுபொருளாதார ஈட்டுகைக்கான வாய்ப்புகளையும் இல்லாது செய்வதில் தமிழக மீனவர்கள் அத்தனை ஆர்வமுள்ளவர்களாகவே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். பலநாள் தங்கியிருந்து மீன்பிடிக்கக்கூடிய படகுகளில், தடைசெய்யப்பட்ட இழுவைமடிகளைப் பயன்படுத்தி அவர்கள் மேற்கொள்ளும் 'மீன் வேட்டையால்' நாளுக்கு நாள் ஈழத்தமிழர்களின் வாழ்வாதாரமும் பொருளாதாரமும் மரணப்படுக்கையை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கின்றது. இழுவை மடிகளாலும், றோலர் படகுகளாலும் அறுத்தெறியப்படும் வலைகளும், அடித்துடைக்கப்படும் படகுகளும், இழக்கப்படும் சொத்துகளும் மில்லியன் டொலர் பெறுமதியானவை.

உண்மைநிலை இவ்வாறிருக்கையில், இலங்கைக் கடற்படை, இந்தியக் கடலோரக் காவற்படையைத் தாண்டிச்சென்று தமிழக மீனவர்களை இழுத்துப் பிடித்துக் கைதுசெய்து வருவதுபோன்ற தோற்றப்பாட்டில் கருத்து வெளியிடுவதையும் கடிதங்கள் எழுதுவதையும் தமிழகத் தலைவர்கள் முதலில் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தமிழகத் தலைவர்கள் ஈழத்தமிழர்களின் போராட்டத்தை மதிக்கின்றார்கள் என்றால், அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட பெருவிருப்புக் கொண்டிருக்கின்றார்கள் என்றால், கடந்த ஒன்றரைத் தசாப்தங்களாக நிலவுகின்ற இந்தக் 'கடற்பதற்றத்தை' உள்ளது உள்ளபடியாக அணுகி நியாயமான தீர்வொன்றைத் தேடுவதற்கு அவர்கள் முற்படவேண்டும்.



# '13' உறுதிமொழிகள்; இந்தியா கவனம்!

## சிங்கள வாரஇதழ் செய்தி

கொழும்பு, ஜூன் 24

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் வழங்கிய உறுதிமொழிகள் தொடர்பில் இந்தியாவின் கவனம் திரும்பியுள்ளது என்று சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு கடந்தவாரம் பயணம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், தமிழ்த் தேசியத் தலைவர்களை கூட்டாகச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். இதன்போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் வழங்கிய உறுதிமொழிகள் என்பவற்றை தமிழ்த் தேசியத் தலைவர்களிடம், இந்திய வெளிவிவகார அமைச்சர் கேட்டறிந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

## டெங்கு தீவிரம்

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 27 ஆயிரத்து 197 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகின்றது. நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதால் பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைத்திருக்குமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

## வற் வருமானம் அதிகரிப்பு

இலங்கையில் பெறுமதி சேர் வரி வருமானம் அதிகரித்துள்ளது என்று நிதி அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. கடந்த 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது 2023ஆம் ஆண்டில் வரி வருமானம் 50 வீதத்தால் உயர்வடைந்துள்ளது. கடந்த 2022 ஆம் ஆண்டில் பெறுமதிசேர் வரி 463.1 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்ட நிலையில் 2023 ஆம் ஆண்டில் பெறுமதிசேர் வரிமூலம் 694.5பில்லியன்ரூபாகிடைத்துள்ளது என்றும் நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## ஓய்வு பெறவுள்ளார் சட்டமா அதிபர்

கொழும்பு, ஜூன் 24

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம், எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமையுடன் ஓய்வுபெறவுள்ளார். 60 வயது நெருங்கியுள்ள நிலையில், ஓய்வுபெறுவதற்குரிய அனைத்து ஆவணங்களையும் அவர் சமர்ப்பித்துள்ளார். இந்நிலையில், சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்துக்கு மேலும் 6 மாதங்களுக்குப் பதவி நீடிப்பு வழங்கும் யோசனையை அரசமைப்பு பேரவைக்கு, ஜனாதிபதி முன்வைத்திருந்தார். எனினும், அந்த யோசனையை அரசமைப்பு பேரவை நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது. (ப-44)

## 1.2 மில்லியன் டொலரில் கடற்படைக்கு உதிரிப்பாகம்

### இந்தியா கையளிப்பு



இந்தியக் கடலோரக் காவல்படையின் றோந்து கப்பலான 'சாசெட்' இரண்டு நாள் பயணமாக கொழும்பை வந்தடைந்து, 1.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய உதிரிப்பாகங்களை இலங்கைக் கடற்படைக்கு இலவசமாக வழங்கியுள்ளது. பாதுகாப்பு, வளர்ச்சி கோட்பாடு மற்றும் அயலவருக்கு முதலிடம் என்ற கொள்கைக்கு இணங்க இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## நாளை

25.06.2024

செவ்வாய்க்கிழமை

ஆனி - 11

சங்கடஹர சதுர்த்தி

சுபநேரம் : 10.25 - 11.55

ராகுகாலம் : 02.55 - 04.25

## நாளொரு நல்வார்த்தை

மனிதனின் குற்றங்களில் பெரும்பாலானவை அவனது நாவிலிருந்துதான் பிறக்கின்றன.

-நபிகள் நாயகம்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காகச் செலவு செய்ய நேரும். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. நரசிம்மரை வழிபட நலன்கள் அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். செலவுகளால் கடன் வாங்க நேரிடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** முயற்சிகள் வெற்றியாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். காரியம் அனுகூலமாக முடியும். பண உதவி கிடைக்கும். வீண் செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். இலாபம் கிடைக்கும். மகாவிஷ்ணுவை வழிபட நல்லதொரு திருப்பம் ஏற்படும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். பணம் இன்று கிடைக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படலாம். வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம். முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்படும். காரியம் அனுகூலமாக முடியும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும். பாதிப்பு எதுவும் இருக்காது. செலவு செய்ய வேண்டி வரும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். பழைய கடன்களைத் தந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பொறுமை அவசியம். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும். இடையூறுகளைத் தவிர்த்துவிடலாம். ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கும்.

**கும்பம்:** கருத்துவேறுபாடுகள் நீங்கும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த' உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் செலவுகளும் ஏற்படக்கூடும்.

# அவுஸ்திரேலியாவுக்கு ஆப்கான் அதிர்ச்சி வைத்தியம்



ரி-20 உலகக் கிண்ண சுப்பர் ஆட்டம் ஒன்றில் ஆப்கானிஸ்தான் அணி 21 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணியை வெற்றிகொண்டுள்ளது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் பந்துவீசத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.

ரஹ்மதுல்லா 60 ஓட்டங்களையும், இப்ரஹீம் 51 ஓட்டங்களையும், ஜனற் 13 ஓட்டங்களையும் ஆப்கான் அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 19.2 பந்துப்பரிமாற்றங்களில் 127 ஓட்டங்களை மட்டுமே பெற்று 21 ஓட்டங்களால் அதிர்ச்சித் தோல்வியை அடைந்தது. ஆப்கான் அணி சார்பாக நைப் 20 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும், நவீன் உல் ஹக் 20 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும், முகமட் நபி ஒரு ஓட்டத்துக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (எ)




# கைதையூர் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 24



கைதடியிலுள்ள சமூகமட்ட அமைப்புகளின் ஏற்பாட்டில், 'திடலெங்கும் திசைபரப்பிட' எனும் தொனிப்பொருளிலான கைதையூர் பெருவிழா, கைதடி மத்திய விளையாட்டு மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு வெகு விமர்சையாக இடம்பெற்றது.

கைதையூர் பெருவிழாவின் விழாக்குழுத் தலைவர் அ.காந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத்தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் யசோதை சரவணபவன், வலிகாமம் வலய கல்விப் பிரதிப் பணிப்பாளர் சிவசம்பு மதியழகன், யாழ்.மாநகரசபைக் கணக்காளர் வசந்தமாலா மனோகரன், சாவகச்சேரி நகரசபைக் கணக்காளர் கார்த்திகாயினி சிறிசனத், சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் கதிர்காமநாதன் சந்திரகுமார், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான நாகலிங்கம் சத்தியநாதன், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை ஓய்வு நிலை உத்தியோகத்தர் வேதநாயகம் தபேந்திரன், கைதடி சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-125)

# மல்வில் ஆலய சங்குமுழுக்கு

பளை - இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலய மகாகும்பாபிஷேக மணவாளக்கோல சங்குமுழுக்கு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. (ச-9)



கோப்பாய்வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா அண்மையில் பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-17)



உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் முத்தேர் பவனி கடந்த வியாழக்கிழமை அடியவர்களின் பங்குபற்றுதலுடன் பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-25-66)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





கௌதம புத்தரின் பிறப்பு, ஞானம் பெறல் மற்றும் பரி நிர்வாணத்தை நினைவுகூரும் உலக பௌத்தர்களின் புனிதமான நாளான வெசாக் தின நிகழ்வு, 'மன்னார் வெசாக் சமாதான வலயம்' எனும் தொனிப்பொருளில் சர்வமதங்களை உள்ளடக்கியதாக மன்னாரில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ப-56-60)





விழிகள் கலாமுற்றத்தின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தேசியக் கலைஞரும் எழுத்தாளருமான எஸ்.ஏ.உதயன் பற்றிய ஜீவநதி கலை இலக்கிய சஞ்சிகை சிறப்பிதழ் ஒன்று வெளியிடப்பட்டது. அந்த ஜீவநதி சிறப்பிதழை முன்வைத்து, முழுநிலா கருத்தாடல் நிகழ்வு, மிக விமரிசையாக பேசாலை விழிகளின் முற்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ப-213)



தேசிய மொழிக் கல்வி, பயிற்சி நிறுவனம் மற்றும் ஐ.ஓ.எல்.பி.எஸ். (IOLPS) இணைந்து, மன்னார் மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்களுக்காக மேற்கொண்ட பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மற்றும் கலை நிகழ்வு, மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. (ப-213)

சங்கானை பிரதேச செயலகம் மற்றும் புலம்பெயர் தேசத்தைச் சேர்ந்த கலைக் விஸ்வநாதன் தபோதரனின் நிதிப் பங்களிப்பில், துணவிப் பகுதியில் பொருண்மியம் நலிவுற்ற குடும்பம் ஒன்றுக்கு, காரைநகர் பிரதேச இராணுவத்தினரின் விசேட மனித வலு பங்களிப்புடன் வீடு ஒன்று கட்டப்பட்டு கையளிக்கப்பட்டது. (ப-125)








## மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

இந்த ஆண்டு வெளிவந்த க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய, யாழ். மாவட் மட்டத்தில் முதல்நிலை பெற்ற நான்கு மாணவர்கள், கடந்த வெள்ளிக்கிழமை கொக்குவிலில் அமைந்துள்ள தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் நடைபெற்ற 46 ஆவது 'தென்னாடு திங்கள் செய்தி' இதழ் வெளியீட்டு நிகழ்வில் வைத்துக் கௌரவிக்கப்பட்டனர்.



நிகழ்வில் தமிழ்நாட்டிலிருந்து வந்த செந்தமிழ் வேள்வித் தொண்டர் சி.இளவேனில், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்.போதனா மருத்துவமனையின் நீரிழிவுச் சிகிச்சை சிறப்பு மருத்துவ நிபுணர் சி.அரவிந்தன், யாழ்.சிதம்பராக் கல்லூரியின் ஆசிரியர் கலாநிதி சு.குணேஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

நிகழ்வில், உயிரியல் பிரிவில் யாழ்.மாவட்ட மட்டத்தில் முதல்நிலை பெற்ற யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவி கு.தாரங்கா, கணிதப் பிரிவில் முதல்நிலை பெற்ற யாழ்.மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவன் ம.டினோஜன், வணிகப்பிரிவில் முதல்நிலை பெற்ற யாழ். இந்துமகளிர் கல்லூரி மாணவி ப.கீர்த்திகா, கலைப் பிரிவில் முதல்நிலை பெற்ற யாழ்.பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி பா.வஜினா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (ப-66)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், முருகனின் அருளாளர் அருணகிரிநாதர் பெருவிழா, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 9.15 மணிக்கு இடம்பெற்றது. சிறப்பு வழிபாடுகளைத் தொடர்ந்து ஆசிரியர் இ.வாகீசன் தொடக்கவுரையையும், யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை முன்னாள் தலைவர் கலாநிதி.நா.வி.மு.நவரத்தினம் 'அருணகிரியான்' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவும் ஆற்றினார். (ப-66)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மருத்துவமனைகளிலுள்ள

# ஆளணி வெற்றிடங்களை நிரப்ப பாடத்தெரிவில் விழிப்பூட்டுக

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 24

வடக்கு - கிழக்கு மருத்துவமனைகளில் தற்போது பலநூறு துணை மருத்துவ ஆளணி வெற்றிடங்கள் நிலவுகின்றன. இதற்கு மாணவர்களின் பாடத்தெரிவே காரணமாக அமைகிறது என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பில் அந்தக் கட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:-

எமது தாயகத்தின் மனிதாபிமான தேவையை நிவர்த்திக்கவேண்டுமெனில் மாணவர்கள் குறைந்தபட்சம் 40 முதல் 50 வீதமாவது கணித, விஞ்ஞானக் கற்கைகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும். வடக்கு - கிழக்கு, மலையகக் கிராமங்களில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் 10 வீதம்கூட விஞ்ஞானப் பிரிவைத் தேர்ந்தெடுப்பதில்லை. இதற்கு நல்லவழி காட்டலின்மை, அதீத பயம், பொருளாதாரக் காரணிகள், எதிர்கால வேலைவாய்ப்புப் பற்றிய தெளிவின்மை, கிராமங்களில் கற்பிக்கச் சிறந்த ஆசிரியர்கள் இன்மை எனப் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே இதுதொடர்பில் சமூகத்தின் பல தளங்களில் மாணவர்களுக்கு விழிப்புணர்வும், அனுசரணையும், வழிகாட்டலும் வழங்கப்படின் எமது ஆளணிப்பற்றாக்குறையை நாமே நிவர்த்தி செய்துகொள்ள முடியும் - என்றுள்ளது. (ச-25 -66)


**கார் விற்பனைக்கு**

14 Sri மிட்ச்சுமிசி கலனர் கார் விற்பனைக்கு.

077 476 2922

(cs55480) (N-1)



**வீட்டின் இடிபாடுகள் விற்பனைக்கு**

கந்தரோடை ஸ்கந்தா பாடசாலைக்கு அருகாமையில் ஒரு பழைய வீடு முற்றாக இடித்து அப்புறப்படுத்தப் படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 417 9120, 076 358 2126, 076 225 4729


Whats app:- 0091 915 954 0807

(CS/55418) J-1



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 • 02 • 1944



மறைவு 05 • 07 • 2023

### மாணிக்கம் கிருஷ்ணசாமி

(உரிமையாளர் - இலட்சுமிபவன் - கிளிநொச்சி)

தந்தை என்ற சொல்லின் திரு உருவமே ! பிறர் கைநாடா பிறவி பெருங்கடலே !
தன்னம்பிகையை தனித்துவமாய் கொண்டாயே! உம் மன உறுதியே என்றும் வெல்வது இறுதியே ! உறவுகளையே உம் நினைவுகளை மட்டும் பரிசாக தந்தாயே........

என்றென்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர் - 077 664 9396

(cs 55464) (N-1)



## பெயர் மாற்றம்


வட்டு தெற்கு வட்டுக்கோட்டையில் வசிக்கும் **உதயகுமார் பிரதீபன்** ஆகிய நான் எனது பெயரை **உதயகுமார் ஹரிபிரடீபன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **உதயகுமார் ஹரிபிரடீபன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

(CS/55461) J-1

**உதயகுமார் ஹரிபிரடீபன்**



## கண்ணீர் அஞ்சலி



சங்க உறுப்பினர் **ற. வேணுகா**
அவர்களின் பாசமிகு தந்தையார்

### பொன்னையா தயாபரமூர்த்தி

அவர்கள் 22.06.2024 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**



ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### பொன்னுத்துரை பரமநாதன்

(ஸ்ரீதேவி அச்சக - உரிமையாளர்)

திதி: அபரபட்ச திருதியை



தோற்றம் 31.03.1942

மறைவு 23.06.2016

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
எட்டு ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

**40, யமுனா வீதி,**
**நல்லூர்.**

மகன் - விஷ்ணு
(விஷ்ணு நகைத் தொழிலகம் யாழ்ப்பாணம்)

(cs 802) (N-1)



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 28 • 09 • 1940



இறப்பு 25 • 05 • 2024

கடந்த 25.05.2024 சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

### அமரர் வேலாயுதம் ஞானமலர்

**திதி: வைகாசி மாத அபுரபட்ஷ துதியை**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நேற்றுமுன்தினம் (22.06.2024) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இன்று (24.06.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும், முகநூல் மூலமும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சென்ற் ஆன்ஸ் லேன்,**
**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

(cs.55481) (N-1)

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**
**077 977 3845**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அகழ்வைத் தடுப்போரை அச்சுறுத்தும் டிப்பர்காரர்கள்!

முல்லைத்தீவு, ஜூன் 24

**மணல் அகழ்வு தகவல்களை, கூட்டங்களில் வெளிப்படுத்தியவர்களின் வீடுகளுக்குச் சென்று அச்சுறுத்தல் விடுக்கும் செயற்பாடுகளில் டிப்பர்களின் உரிமையாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.**

கடந்த 10 நாள்களுக்கு முன்னர் துணுக்காய் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், கடந்த 15 ஆண்டுகளாக ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி ஆகிய கிராமங்களில் நடைபெறுகின்ற சட்டவிரோத மணல், கிரவல், மரக் கடத்தல் தொடர்பாகத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. இந்நிலையில், மேற்பட்டி கிராமங்களில் இருந்து வெளியிடங்களுக்குக் கொக்காவில் வழியாக அகழ்வுப் பொருள்கள் கொண்டு செல்ல முடியாது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பும் ஐயன்கன்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனால், கூட்டத்தில் தகவல்கள் வழங்கியவர்கள் வீடுகளுக்குச் சென்று, டிப்பர் உரிமையாளர்கள் அச்சுறுத்தல்களை விடுப்பதுடன் எந்தத் தடை இருந்தாலும் கொக்காவில் வழியாக அகழ்வுப் பொருள்கள் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படும் எனவும் தெரிவித்து வருகின்றனர். கூட்டங்களில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் அகழ்வுப் பொருள்கள் ஐயன்கன்குளம் பொலிஸார், கொக்காவில் இராணுவத்தின் துணையுடன் வெளியிடங்களுக்குத் தொடர்ச்சியாகக் கொண்டு செல்லப்படுவதாக மேற்படி கிராமங்களின் மக்கள் தெரிவிக்கின்றனர். (ப-13)

## யாழ்.போதனாவில் நூதனத் திருட்டு

### நோயாளியின் நகை, பணம் 'அபேஸ்'

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்.போதனா மருத்துவமனையில் பார்வையாளர் நேரத்தில் நூதனமான முறையில் நோயாளி ஒருவரின் உடைமைகள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை நடந்துள்ளது.

சத்திரசிகிச்சை விடுதியில் அனுமதிக்கப்பட்ட நோயாளி ஒருவரிடம் சகஜமாக கதைத்து அவருடைய மோதிரம், சிறுதொகைப்பணம் மற்றும் கைப்பை என்பனவே களவாடப்பட்டுள்ளன.

நோயாளியிடம் எக்ஸ்-ரே எடுக்கப் போகவேண்டும் தயாராகுங்கள் என்று கூட்டிச் சென்ற ஒருவர், நோயாளியிடமிருந்த நகை, பணத்தை அபகரித்துக்கொண்டு தலைமறைவாகியுள்ளார்.

சந்தேகநபர் சி.சி.ரி.வி.யில் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவரின் விவரம் தெரிந்தவர்கள் மருத்துவமனை பணிப்பாளர் காரியாலயத்துக்கு அறியப்படுத்தலாம் என்றும் நோயாளர்கள் மருத்துவமனைக்கு வரும் போது பெறுமதியான பொருள்களை எடுத்து வரவேண்டாம் என்றும் மருத்துவமனை நிர்வாகம் கோரியுள்ளது. (ச-26-66)

## வெளிநாட்டுக் கல்வி; மோசடியாளர் கைது

கொழும்பு, ஜூன் 24

ரஷ்யாவில் உயர்கல்வி பெற்றுத் தருவதாகக் கூறி சுற்றுலா விசா மூலம் மாணவர்களை ரஷ்யாவுக்கு அழைத்துச் சென்று ஏமாற்றி பண மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேகநபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேகநபருக்கெதிராக 22 முறைப்பாடுகள் நாட்டின் பல பொலிஸ் நிலையங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது.

அத்துடன் சந்தேகநபர் ரஷ்யாவுக்கு அழைத்துச் சென்ற மாணவரொருவரை கத்தியால் குத்திக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் சந்தேகநபருக்கு எதிராக ரஷ்யாவிலும் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)



யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸாருக்கான உடற்பயிற்சிக்கூடமொன்று, யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்தவால் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. (ப-26)

## சிறுமி...

துஷ்பிரயோகத்துக்குள்ளான நிலையில் 14 வயதுடைய சிறுமியொருவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறுமியிடம் சட்டமருத்துவ அதிகாரி மேற்கொண்ட விசாரணையில், முள்ளியவளைப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவனே தன்னைத் துஷ்பிரயோகம் செய்ததாக அவர் அடையாளம் காட்டியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சந்தேகநபரை கைதுசெய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். பாதிக்கப்பட்ட சிறுமி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் உளநல சிகிச்சை பெற்றுவருகின்றார். (அ-ச-19)

## ரணிலுக்கே ஆதரவு

### பிள்ளையான் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது கட்சி ஆதரவளிக்கவுள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிரங்க நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்புக்கும் பயணம் செய்தபோது இடம்பெற்ற சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டத்துக்கு ஆதரவு வழங்கினால் மண்ணை நம்பி வாழும் கிழக்கு மக்களுக்கு சொந்தக் காலில் நிற்கும் வாய்ப்புக்கிடைக்கும் என்றும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார். (ச-இ)

## சந்நிதியானுக்கு...

தொண்டைமானாறு செல்வச்சந்நிதிஆலய வருடாந்த ஆனிப்பொங்கல் இன்று திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் இடம்பெறவுள்ளது .

செல்வச்சந்நிதியானின் வருடாந்த ஆனிப் பொங்கலை முன்னிட்டு கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு உப்புத் தீர்த்தம் எடுத்து விளக்கு ஏற்றி, விசேட வழிபாடு கள் இடம்பெற்றிருந்தநிலையில், இன்றிரவு ஆனிப் பொங்கல் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சூழ நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-26)

## மஹோற்சவம்

குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம், இன்று திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் பன்னிரண்டு தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக இந்த ஆலய மஹோற்சவம் இடம் பெறும். ஜூலை மாதம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், அன்றைய தினம் இரவு 7.30 மணிக்குக் கொடியிறக்கத் திருவிழாவும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

## வருடாந்த மஹோற்சவம்

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம், ஜூலை மாதம் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்தும் பதினாறு தினங்கள் பூஜைவழிபாடுகள் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 19 ஆம் திகதி இரதோற்சவமும், 21 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ப)

## காலை மிதித்ததால் குத்திக்கொலை!

கொழும்பு, ஜூன் 24

பேருவளை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து பலநாள் மீன்பிடிப் படகில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் நடுக்கடலில் மோதிக்கொண்டதில் மீனவரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளார். உறங்கிக் கொண்டிருந்தபோது காலை மிதித்ததனால் ஏற்பட்ட வாய்த் தர்க்கமே கொலையில் முடிந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். பின்னர் ஏனைய மீனவர்கள் இணைந்து இறந்த மீனவருடன் கரை திரும்பியுள்ளனர். (ச-555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தேச மீனவர் வாழ்வாதாரத்தை இந்தியாவே பாதுகாக்கவேண்டும்

## ஜெய்சங்கரிடம் கஜேந்திரன் எம்.பி. கடிதம் கையளிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 24**

**இந்திய அரசாங்கம் தமிழ்த் தேசத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்துவதில் தமிழ்த் தேசமும், எமது அரசியல் இயக்கமும் எப்போதும் உறுதுணையாக நிற்கும்.**

-இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரை கடந்த வியாழக் கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கருத்துகள் எழுத்து மூலம் வெளிவிவகார அமைச்சரிடம் கையளிக்கப் பட்டது. அதிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைத்தீவில் தமிழருடைய தேசத்தையும் அதன் இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கும் சமஷ்டித் தீர்வை அடைந்து கொள்ள இந்தியா ஒத்துழைக்கவேண்டும்.

கடந்த 75 வருடங்களாக இலங்கை கடைபிடித்துவரும் கொள்கைகளும், தீர்க்கப்படாமல் நீண்டு செல்லும் இனப்பிரச்சினையுமே இலங்கையின் இன்றைய இந்த வங்குரோத்து நிலைக்குக் காரணமாக அமைந்திருக்கிறது. நாட்டின் எதிர்காலம் சிறப்பானதாக இருக்க வேண்டுமெனில், இந்த நாட்டின் கொள்கைகளிலும் ஓர் உண்மையான தீர்க்கமான மாற்றம் தேவைப்படுகின்றது.

இனப் பிரச்சினைக்கான அடிப்படை காரணியாக அமைந்தது இலங்கையிலிருக்கும் 'ஒற்றையாட்சி' அரசியல் அமைப்பாகும். போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் தமிழர் தேசம் மீதான கட்டமைப்புசார் இனவழிப்பும் தீவிரமடைந்து மீண்டும் இனமுரண்பாடுகள் வலுவடைந்து செல்வதற்கும் அடிப்படைக் காரணம் இதே ஒற்றையாட்சி அரசியல் கட்டமைப்பேயாகும்.

அரசியலமைப்பு மூலம், நாட்டின் ஐக்கியத்தை பேணிக் கொள்ளும் அதேவேளை, ஒற்றையாட்சியைக் கடந்து சமஷ்டி முறையைக் கருத்தில் எடுப்பதன் மூலமே இனப்பிரச்சினைக்கான தீர்வை அடையமுடியும் என்பதை சிங்களத் தேசத்தின் தலைவர்கள், தமது மக்களுக்கு நேர்மையாகவும் வெளிப்படையாகவும் அறிவிக்கவேண்டும் என்பதை எமது அமைப்பு வலியுறுத்தி நிற்கின்றது.

ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு தீர்வையும் தமிழர்கள் நிராகரிப்பதை இந்தியா ஏற்று, தமிழரின் அந்த நிலைப்பாட்டுக்கு உறுதுணையாக நிற்பதோடு, தமிழர்தேசத்தை அங்கீகரித்து அதைப் பாதுகாக்கின்ற வகையிலானதும், தமிழர்கள் ஒரு போதும் இழக்கமுடியாத தங்களது சுயநிர்ணய உரிமையை, அனுபவிக்கக் கூடியதுமான ஒரு சமஷ்டித் தீர்வுக்கான தன் ஆதரவை வெளிப்படுத்தவேண்டும் எனவும் எமது அமைப்பு இந்தியாவை தீர்க்கமாக வேண்டிக்கொள்கிறது - என்றுள்ளது.

(எ-இ)

# பொது வேட்பாளரால் வாக்குச்சிதைவாம்

## கூறுகிறார் ஆனந்தசங்கரி

*யாழ்ப்பாணம், ஜூன் 24*

அரசியலில் அனுபவம் இல்லாதவர்களால் பல சந்தர்ப்பங்கள் கைநழுவிப் போயுள்ளது. இன்று பேசப்படும் அரசியல் தீர்வுகள் தீர்வாகாது. இன்று பொது வேட்பாளர் என பேசப்படுவது வாக்குச் சிதைவுகளை ஏற்படுத்துமேயன்றி வேறு எதையும் பெற்றுத்தராது.


இவ்வாறு கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முள்ளிவாய்க்காலில் அப்பாவி உயிர்களை காப்பாற்ற தவறியவர்கள், இன்று நினைவேந்தல் செய்கின்றனர். நாடாளுமன்றம் இறைமையை இழந்துள்ளது. அரசியலில் அனுபவம் இல்லாதவர்களால் பல சந்தர்ப்பங்கள் கைநழுவிப் போயுள்ளது. தமிழ், சிங்கள அரசியல்வாதிகளில் நான் மூத்த அனுபவம் உள்ள அரசியல்வாதி. இன்று பேசப்படும் அரசியல் தீர்வுகள் தீர்வாகாது. இந்திய முறையிலான அரசியல் தீர்வே பொருத்தமானது. இந்த தீர்வுத் திட்டத்தை வெளிப்படையாக அறிவித்து போட்டியிடும் வேட்பாளரை ஒன்றாக சேர்ந்து ஆதரிப்போம். பொது வேட்பாளர் என பேசப்படுவது வாக்குச் சிதைவுகளை ஏற்படுத்துமேயன்றி வேறு எதையும் பெற்றுத்தராது - என்றார்.

(ச)

# வேகமான நீர்த்தேடல் மற்றும் மீட்புப் பயிற்சி - 2 ஆம் நிலை



இலங்கை அனர்த்த முகாமைத்துவத்துக்கான ஆசிய பசுபிக் கூட்டமைப்பு (எ.பி.எ.டி), பேரிடர் எதிர்கொள் திறன்களை மேம்படுத்துவதற்கான நிலையான உறுதிப்பாட்டை உருவாக்கும் நோக்கில், வேகமான நீர்த்தேடல் மற்றும் மீட்புப் பயிற்சி 2 ஆம் நிலையை ஒழுங்கமைத்துள்ளது.


இப்பயிற்சிநெறி கித்துல்கலவில் நாளை 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 27 ஆம் திகதி வியாழக்கிழமை வரை மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியானது விரைவான நீரில் வழிசெலுத்துதல், மேம்பட்ட மீட்பு நுட்பங்களில் தேர்ச்சி பெறுதல் மற்றும் நிஜ வாழ்க்கைக் காட்சிகளை உருவகப்படுத்துவதற்கான இரவுநேரப் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமையும் எனவும் குறிப்பிடத்தக்கது.

(ப)


# மரண அறிவித்தல்

மண்ணில் 08 . 05 . 1967



விண்ணில் 22 . 06 . 2024

**புளோயிட் பீற்றர்சன் (சூட்டி)**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி (பேக்கரி லேனை) வசிப்பிடமாகவும் கொண்ட புளோயிட் பீற்றர்சன் (22.06.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதி மரணச்சடங்கு (25.06.2024) செவ்வாய்க் கிழமை நாளை அவரது இல்லத்தில் திருப்பலி வழிபாடு ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து அவர் பணிபுரிந்த வைற்கவுஸ் **(White House Funeral Service)**ல் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் மணியந்தோட்டத்தில் (ஹெலன் தோட்டம்) நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல-02, பேக்கரிலேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 603 4910, 076 450 0461

(CS 812) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞர்...

மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நெடுந்தீவில் கடந்த 20 ஆம் திகதி அன்ரன் ஜிவராஜ் அமல்ராஜ் என்ற 22 வயது இளைஞர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.
இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சமன் பிறேமதிலக தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்து, சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்தனர். அவருக்கு உடலில் காயங்கள் இருந்தமையால், அவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். விசாரணைகளின் அடிப்படையில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.
சந்தேகநபர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் நிகழ்வொன்றில் மதுபோதையில் ஏற்பட்ட மோதலின் தொடர்ச்சியாகவே இந்தக் கொலை நடந்துள்ளது என்று தெரியவருகின்றது.
உயிரிழந்தவரும், முதலில் கைதான சந்தேகநபரும் நண்பர்களாவர். இவர்கள் சம்பவ தினம் அங்குள்ள வீடொன்றில் நடந்த நிகழ்வுக்குச் சென்றிருந்த போது ஒன்றாக மது அருந்தியுள்ளனர். போதையில் இருந்தநேரம் இருவருக்குள்ளும் வாக்குவாதம் ஏற்பட்டு மோதலாக மாறியுள்ளது.
உயிரிழந்த நபர் மற்றையவரைத் தாக்கியதில் அவரது முகத்தில் காயம் ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது. இந்த முரண்பாட்டின்பின்னர் இருவரும் அங்கிருந்து அகன்றுள்ளனர். முகத்தில் காயம் ஏற்பட்ட நபர் (சந்தேகநபர்) அங்கிருந்து சென்று தனது நண்பர்கள் சிலரை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றுள்ளார்.
இவர்கள் மருத்துவமனைக்குச்செல்லும் வழியில், தாக்குதல் நடத்திய நபரும் (உயிரிழந்த இளைஞர்) தனது நண்பர்கள் சிலரை அழைத்துக்கொண்டு அதே வழியில் வந்தார் என்றும், அதையடுத்து அவர்களிடையே மீண்டும் கைகலப்பு ஏற்பட்டது என்றும் கூறப்படுகின்றது.
அங்கு நடந்த மோதலில் 'றீப்பைக்' கட்டையால் தாக்கப்பட்டதிலேயே இளைஞர் உயிரிழந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.
இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, மேலும் சில சந்தேகநபர்கள் தேடப்பட்டும் வருகின்றனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (அ-26)

## புலிகள்...

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலில் 2001 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் திகதியன்று பிரிட்டன் இணைத்துக்கொண்டது.
இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான தடையை நீக்குவதற்குப்பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
தமிழீழ விடுதலைப் புலிகளின் தடை அகற்றப்படவேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், பிரிட்டனின் உள்துறை அமைச்சகத்துக்கு 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 7 ஆம் திகதியன்று விண்ணப்பித்திருந்தது.
எனினும் கூட்டுப் பயங்கரவாத பகுப்பாய்வு மையம், உள்நாட்டு மற்றும் சர்வதேச பயங்கரவாத அச்சுறுத்தல்களின் பகுப்பாய்வு மற்றும் மதிப்பீட்டுக்கான பிரித்தானிய மையம் ஆகியவற்றின் மதிப்பாய்வுசெயல்முறையைத்தொடர்ந்து, அந்தக் கோரிக்கை 2019 மார்ச் 8 ஆம் திகதியன்று நிராகரிக்கப்பட்டது.
பின்னர் 2020 ஒக்ரோபர் 21 ஆம் திகதியன்று மேன்முறையீட்டு ஆணையம் இது தொடர்பில் மேன்முறையீட்டை மேற்கொள்ள அனுமதித்தது.
இது தொடர்பான தீர்ப்பு 2021 மே 13 ஆம் திகதி வழங்கப்பட்டது. அதில், 2012 ஜூன் 3 ஆம் திகதிக்குள் தடை நீக்கம் செய்வதற்கான விண்ணப்பத்தில் கூடுதல் பிரதிநிதித்துவங்களை வழங்க வேண்டும் என்றும், பிரிட்டனின் இராஜாங்கச் செயலரே அந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கான முடிவை எடுக்கவேண்டும் என்றும் ஆணையகம் குறிப்பிட்டிருந்தது. எனினும்தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை தொடர்வதாக 2021 ஒகஸ்ட் 31 ஆம் திகதி பிரிட்டனின் இராஜாங்க செயலர் அறிவித்தார்.
இந்த நிலையில் 2021 ஒக்ரோபர் 12 ஆம் திகதியன்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், அந்த முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்தது. அத்துடன் மற்றொரு குழுவும் தடை நீக்கம் செய்வதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தது. அகிம்சை வழிகளில் அதன் அரசியல் மற்றும் கருத்தியல் நோக்கங்களைத்தொடர விரும்புவதால், பிரிட்டனில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப்படக்கூடாது என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வாதத்தை முன்வைத்திருந்தது.
அந்த விண்ணப்பங்களும் இராஜாங்க செயலாளரால் நிராகரிக்கப்பட்டன. இந்த நிலையிலேயே மேன்முறையீட்டு ஆணைக்குழு கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேன்முறையீட்டை நிராகரித்ததுடன், பிரிட்டனில் விடுதலைப் புலிகள் மீதான தடையைத் தொடரவும் உத்தரவிட்டுள்ளது.
புலிகள் மீதான பிரிட்டனின் தடை நீடிப்பை, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வரவேற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## அதிபர்,...

அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளம் தொடர்பில் நீண்டகாலமாக நிலவி வருகின்ற முரண்பாட்டுக்குத் தீர்வு வழங்குமாறு வலியுறுத்தியும், பெற்றோருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சுமைகள் மற்றும் மாணவர்களின் போஷாக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டியும் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை நாடளாவிய ரீதியில் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் சுகவீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுக்க வுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.
யாழ். சுண்டுக்குளியில் அமைந்துள்ள இலங்கை ஆசிரியர் சங்க உபதலைவரின் இல்லத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
26 ஆம் திகதி பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்புவதைத் தவிர்த்து, பொருத்தமான வழிமுறைகள் ஊடாகத் தங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பை பெற்றோர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுக்கின்றது.
சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் பங்கு பற்றுகின்ற அதிபர்களோ, ஆசிரியர்களுக்கு அதிகாரிகளோ அல்லது திணைக்களத் தலைவர்களோ எந்தவிதமானதொரு அச்சுறுத்தல்களையும் விடுக்க முடியாது.
இதேநாளில் முற்பகல் 10 மணியளவில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாகப் பெரும் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.
இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கையின் பல பாகங்களையும் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் பெருந் திரளாகக் கலந்து கொள்வர். எனவே, வடமாகாணத்தில் இந்தச் சுகவீன விடுமுறைப் போராட்டத்துக்கு அதிபர்கள், ஆசிரியர்களின் முழுமையான பங்களிப்பையும், ஒத்துழைப்பையும் நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம் - என்றார். (அ-66)

## 'ஆட்டையைப்'...

சந்தேகநபர், யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர் ஒருவருக்கு அறிமுகமாகியுள்ளார். அந்த இளைஞரை தமது மனித உரிமைகள் காப்பத்தின் ஊடாக வெளிநாட்டுக்கு அனுப்பலாம் எனவும், அதற்கு 60 இலட்சம் ரூபா பணம் மட்டுமே தேவை எனவும் அந்த இளைஞருக்கு குறித்த சந்தேகநபர் ஆசையூட்டியுள்ளார்.
இதனை நம்பிய குறித்த யாழ். இளைஞரும் 60 இலட்சம் ரூபாவை அவரிடம் கையளித்துள்ளார். ஆனால் பல மாதங்கள் கடந்தும் அந்த இளைஞரை, சந்தேகநபர் வெளிநாட்டுக்கு அனுப்பாமல் டிமிக்கி கொடுத்ததால் இளைஞருக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதனால், அவர் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் அடிப்படையில் துரிதவிசாரணைகளை மேற்கொண்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விசாந்தவின் கீழ் இயங்கும் விசேட குற்றவிசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினர், அந்தச் சந்தேகநபர் கொழும்பைச் சேர்ந்தவர் அல்லர் என்பதையும், அவர் கிழக்கு மாகாணத்தில் வசிப்பதையும் கண்டுபிடித்தனர். அத்தோடு அவர் மோசடியில் ஈடுபடுவதற்காக மனித உரிமைகள் காப்பகத்தில் பணியாற்றுவதாகக் கூறிக்காண்பித்த அடையாள அட்டையும் போலியானது எனத் தெரியவந்தது.
இந்த நிலையில் அவரை சாதுரியமாக யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்துக் கைது செய்த பொலிஸார், சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவிடம் முற்படுத்தினர். சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-26)

## இன்று...

சுகவீன லீவு போராட்டத்தில் ஈடுபடப்போவதாக தெரிவித்துள்ளன.
எனினும் பாடசாலைகள் வழமை போல் நடைபெறும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது. இன்றையதினம்பாடசாலைகளுக்கு விடுமுறை என சமூக வலைத்தளங்களில் வெளிவரும் செய்திகளை நம்பவேண்டாமெனவும் கல்வியமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. (அ-6)

## முதல்நாள்...

குறித்த பெண்ணுக்கு கடந்த 20 ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதற்காக அவர் யாழ். போதனா மருத்துவமனைக்கு 22 ஆம் திகதி சென்று சிகிச்சை பெற்று, மருந்தையும் வாங்கி வந்து, உட்கொண்டுள்ளார். ஆயினும் அடுத்தநாள் அவரது உடல்நிலை மோசமடைந்துள்ளது. மூச்சுவிடக்கூட கஷ்டப்பட்ட அந்தப் பெண், உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் அங்கு சென்றபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.
மரணவிசாரணைகளை யாழ். போதனா மருத்துவமனையின் திடீர்மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். இறந்தவரின் உடற் பாகம் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. (அ-26)

## 3 வயதுப்...

துள்ளனர். சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாயாரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமையவே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.
குறித்த சிறுமியின் தாயார் தினமும் கூலி வேலைக்குச் செல்வார். அப்போது அவர் தனது பிள்ளையை அயலிலுள்ள வீட்டில் விட்டுச்செல்வது வழமை. இவ்வாறு விட்டுச் சென்றபோதே 3 வயதுச் சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுக்கப்பட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.
சிறுமி மருத்துவப் பரிசோதனைக்காக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-ச-18)

## ஒவ்வாமையால்...

அச்சுவேலி மேற்குப் பகுதியைச் சேர்ந்த கபிலன் கபிசன் என்ற விசேட தேவையுடைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
குறித்த சிறுவனுக்கு கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து வாந்தி ஏற்பட்டதையடுத்து அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்படும் போது செல்லும்வழியில் சிறுவன் உயிரிழந்துள்ளான் என்று தெரிவிக்கப்படுகிறது.
உடற்கூற்றுப் பரிசோதனையில் குடல் ஒவ்வாமை காரணமாகவே இந்த இறப்புச் சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ச-26)

## தம்பதியர்...

தெரிய வருவதாவது:-
பலாலி வடக்கு மானிப்பாயில் உள்ள வீடொன்றினுள் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் வாளுடன் அத்துமீறி உள்நுழைந்த மர்மநபர் ஒருவர் தூக்கத்தில் இருந்த தம்பதியர் மீது வாளினால் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். இதனையடுத்து காயங்களுக்குள்ளான நிலையில் அந்தத் தம்பதியர் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து விசாரணையில் ஈடுபட்டுள்ள மானிப்பாய் பொலிஸார், சந்தேகநபரை இனங்கண்டுள்ளதாகவும் அவரைக் கைது செய்ய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (அ-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழர்களின்...

பொதுவேட்பாளரை சுமந்திரன் எதிர்த்தாலும், ஆதரிக்கும் நிலைப்பாட்டிலேயே சிறீதரன் இருக்கின்றார் - என்று புளொட் அமைப்பின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன் தெரிவித்தார். சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த நேர்காணலின் சில முக்கியமான பகுதிகள் வருமாறு:-

கேள்வி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டாக உடைந்துள்ளதா?

பதில் - ஆம்.

கேள்வி - முதலில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால் நீங்கள் எப்படிப் போட்டியிடுவீர்கள்?

பதில் - புதிய கூட்டணியின்கீழ் போட்டியிடுவோம்.

கேள்வி - அப்படியானால் இம்முறை தமிழரசுக் கட்சி சின்னத்தில் போட்டியிட மாட்டீர்களா?

பதில் - எமக்கு அதில் விருப்பம் இல்லை. நாடாளுமன்றத்தில் எமது பக்கம் நால்வர் உள்ளனர். தமிழரசுக் கட்சிக்கு ஐவர் உள்ளனர். எனினும், எம்மிடம் கலந்துரையாடாமல் தேசியப்பட்டியலை நியமித்தனர். இது தவறு.

கேள்வி - தமிழரசுக் கட்சியும் உடைந்துள்ளதா?

பதில் - உத்தியோகபூர்வமாக இல்லாவிட்டாலும் அக்கட்சிக்குள் கடும் கருத்து மோதல் உள்ளது.

கேள்வி - முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது. தமிழரசுக் கட்சிதான் பிரதான கட்சி, இது பற்றி அவர்கள் இன்னும் அறிவிக்கவில்லையே?

பதில் - தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு சுமந்திரன் எதிர்ப்பு. ஆனால் சிறீதரன் ஆதரவு. இதுதான் அவர்களின் நிலைப்பாடு.

கேள்வி - ஜனாதிபதித் தேர்தலில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி ரணிலுக்கு ஆதரவு வழங்கினால் தமிழ் மக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவார்களா?

பதில் - அது சற்றுக் கடினம்தான்.

கேள்வி - சஜித், அநுர ஆகியோரில் தமிழ் மக்கள் மத்தியில் யாருக்கு கூடுதல் செல்வாக்கு உள்ளது?

பதில் - சஜித் பிரேமதாஸவுக்குத்தான்.

(அ-44)

## குப்புறக்...

இந்த விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளை நடந்துள்ளது. இதன்போது இரண்டு தொலைத்தொடர்பு தூண்கள் சேதங்களுக்குள்ளானதுடன் அந்த வீதியூடாகச் செல்கின்ற தொலைத்தொடர்பு வலையமைப்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

விபத்தில் எவருக்கும் காயமில்லை என்றும் விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன எனவும் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ-ச-113)

## வேலை ஆட்கள் தேவை

**கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு**

Store இனைப் பராமரிப்பதற்கும் (Store Keeper)

Purchasing செய்வதற்கும்

Driving வேலைக்கும் ஆட்கள் தேவை.

தொடர்புக்கு:

077 990 6057, 076 760 0403

## IELTS - 29.06.2024 New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes

இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.

077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (CS7816) V-1

## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 173 7684

CS(777) V-1

## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடத்திற்கு தகுதியான வரிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- சாரதி (Driver)

மேற்படி வெற்றிடத்திற்கு தகுதியானவர்கள் இன்று (24.06.2024) திங்கட்கிழமை, மு.ப. 9.00 - பி.ப 2.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

உதயன் — இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வெல்டர் தேவை



யாழில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு வெல்டர் தேவை. பகுதி நேரமாகவோ முழு நேரமாகவோ பணியாற்றலாம்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தங்கி நின்று பணிபுரிபவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்

தொடர்பு:- 077 120 9998

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்**

**A-9 வீதி முகப்புடன் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- இருபதடிப்பாதை (20).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)

Golden Real Estate (pvt) Ltd.

077-029 4164

077-329 4130

077-294 1521

## வேலையாள்கள் தேவை



யாழில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு **மேசன், தச்சுத் தொழிலாளர்** தேவை.

பகுதி நேரமாகவோ முழு நேரமாகவோ பணியாற்றலாம்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தங்கி நின்று பணிபுரிபவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.



தொடர்பு:- 077 120 9998

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள்

சகல நாடுகளுக்குமான விசேட விலைக்கழிவு

(மற்றய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்)

திருமுருகன் பொதிகள் சேவை

321, K.K.S வீதி, யாழ்ப்பாணம்

0777 554 528

11 KG மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK | - 1300/= |
| Canada | - 2400/= |
| Australia | - 2300/= |
| USA | - 2400/= |
| France | - 1990/= |
| Germany | - 1990/= |

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 01 . 1951



இறப்பு 22 . 06 . 2024

### அமரர் சுப்பையா சிவலிங்கம்

வீமன்காமம் வடக்கு மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா சிவலிங்கம் அவர்கள் (22.06.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லப்பா - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், பொன்னுத்துரை, மற்றும் கந்தசாமிப்பிள்ளை, செல்வநாயகம், அவர்களின் அன்புச் சகோதரனும், திருக்குமரன் (கனடா), சோதிரூபன், மயூரன், நிரோசன் (தெல்லிப்பளை அஞ்சல் அலுவலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கஜவதனியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2024) திங்கட்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வீமன்காமம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்.**

திருக்குமரன் - 00164 7671 3127 (கனடா)

நிரோசன் - 077 807 0482 (இலங்கை)

## தவறிவிட்டது

இல.314/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பத்மலிங்கம் ஆதித்தியன் ஆகிய எனது தே.அ.அட்டை (இல.200500700587), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன ராஜா திரையரங்கில் நேற்று 22.06.2024 மதியம் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஶ்ரீராம் ஜுவல்லர்ஸ் (ராஜா திரையரங்கு முன்பாக) ஒப்படைத்து உதவவும் அல்லது 077 234 9933 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

(தகுந்த சன்மானம் வழங்கப்படும்) (cs.55478) (N-1)

## வேலைக்கு ஆள் தேவை

பண்ணை வேலைக்கு ஆள் தேவை, சம்பளமாக சுமார் 55.000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும், EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடு முறையில் வீடு சென்று வரலாம்)

(CS 814) V-1

தொடர்பு: 076 778 8493



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24. 06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org